வெளியீடு எண் 113.

# திருவிளநகர்த் திருப்பதிகம்



சம்பந்தர்

தருமபுர ஆதீனம்.



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
௨௫-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 118.

உ
குருபாதம்
திருச்சிற்றம்பலம்

# திருவிளநகர்த் திருப்பதிகம்

இது
திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனம்
உடு-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
திருவுள்ளத்தின்படி
வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்
1946.

உ

சிவமயம்

# பதிப்புரை

திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனம் உ௬-வது மகாசந்நிதானம் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்** சமய வளர்ச்சி கருதி ஆற்றி வரும் பணிகள் பலவாகும். அவைகளுள் திருப்பதிகங்கள் கொண்ட 274 சிவஸ்தலங்களிலும் ஆதீனச் சார்பில் சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, அந்தந்தத் தலப்பதிகங்களையும் ஆங்காங்கு முறைப்படி ஓதுவித்து, ஆராதனை முடிவில் அத்தலப்பதிகங்கள் அடங்கிய புத்தகங்களை அன்பர்கட்கு வழங்குதலும் ஒன்றாகும். ஆதலின் அவர்கள் திருவுள்ளப்பாங்கின்படியே **திருவிளநகர்த் திருப்பதிகம்** என்னும் இந்நூல் ஆதீன வெளியீடாக வெளிவந்துள்ளது. அன்பர்கள் பதிகங்களைப் பாராயணஞ்செய்து **ஸ்ரீ துறைகாட்டும் வள்ளலார்** திருவருளால் எல்லா நலங்களும் பெற்று உய்வார்களாக.

உ

சிவமயம்

# திருத்தலக் குறிப்பு

பூவிரிபொழில்சூழ் காவிரி வளம்பெறும் சோழநாட்டில் விளங்கும் நூற்றுத்தொண்ணூறு சிவஸ் தலங்களுள் 127-தலங்கள் காவிரியின் தென்பால் திகழ்கின்றன. அவைகளுள் **திருவிளநகர்** என்னும் இத்தலமும் ஒன்று. தலவரிசையில் 103-வது தலம். இது தஞ்சை ஜில்லா மாயூரம் தாலூக்காவில் மாயூரமிருந்து தரங்கம்பாடி செல்லும் கற்சாலையில் சுமார் 4-கல் தொலைவிலிருக்கிறது. ஆலயம் மிக அழகியது. இறைவன் சந்நிதி கிழக்கு முகமாகவும், இறைவி சந்நிதி தெற்கு முகமாகவும் விளங்குகிறது. ஆலயத்திற்கு வடபால் சமீபத்தில் காவிரி தீர்த்தம் உளது. இறைவன் திருநாமம் **துறைகாட்டும்வள்ளலார்.** இறைவி திருநாமம் **வேயுறுதோளியம்மை,**

தருமபுர ஆதீன கர்த்தரவர்களின் பரிபாலனத்திற்குட்பட்ட ஆலயங்களுள் இதுவும் ஒன்று.

அருள் வித்தன் என்னும் அந்தணன் இறைவனுக்காக மலர் பறித்துக்கொண்டு ஆற்றில் இறங்கி வரும்பொழுது வெள்ளம் வரவே, திகைத்துத்தவித்த அவனுக்கு இறைவன் எளிவந்து 'இதுவழியாக ஏறிவா' என அறிவித்துத் துறை காட்டியதால் இறைவனுக்குத் துறைகாட்டும் வள்ளல் எனத் திருநாமம் வழங்கிவருவதாக ஒரு வரலாறு கூறப்படுகின்றது.

தலயாத்திரை செய்து கொண்டுவந்த சம்பந்த சுவாமிகள் மாயூரமென வழங்கும் திருமயிலாடுதுறை ஆலயத்தை அடைந்து இறைவனை வணங்கித் திருப்பதிகம் அருளி, அப்பதி அகன்று அடியார்களோடும் இங்கு வந்து பணிந்து அருளிய திருப்பதிகம் ஒன்று மட்டும் இத்தலத்திற்குக் காணப்படுகின்றது.

'மெய்த்த காதலில் விளநகர் விடையவர் பாதம்
பத்தர் தம்முடன் பணிந்திசைப்பதிக முன்பகர்ந்தார்,'

என்பது திருத்தொண்டர் புராணம்.

## திருஞானசம்பந்தர் சிறப்பு

இவர் சீகாழிப்பதியிலே கவுணியர்குலத்தில் அவதரித்தவர். தந்தையார் சிவபாதவிருதயர். தாயார் பகவதியம்மையார். இவர் தமது மூன்றும் பிராயத்திலே தந்தையாரோடு பிரமதீர்த்தத்திற்கு வந்தபோது நீருள் மூழ்கிய தந்தையைக் காணுது திருத்தோணிச் சிகரம் பார்த்து அம்மே! அப்பா!! என்று அழுது, இறைவன் ஆணைப்படி அம்மையாரளித்த சிவஞானப்பாலை அருந்திச் சிவஞான சம்பந்தராயினுர். அன்றே தலயாத்திரை செய்ய எண்ணிப் புறப்பட்டார். அடியார் குழாங்களும் பின்சென்றன. பல நாட்டுத் தலங்களையும் தரிசனம் செய்தார். இன்றியமையாத காலங்களில் இறைவன் அருளால் வந்த பொற்றுளம், முத்துப்

பல்லக்கு, முத்துச்சின்னம், முத்துக்குடை, முத்துப்பந்தர், பொற்கிழி, படிக்காசு முதலியனவும் பெற்றார். திருமறைக்காட்டில் அப்பர் திறந்த திருக்கதவை மீண்டும் அடைக்கப்பாடினார். பாலையை நெய்தலாக்கினார். பாண்டியனுக்குக் கூனையும் சுரத்தையும் போக்கினார். ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கினார். விடந்தீண்டி இறந்த வணிகனை உயிர்பெறச்செய்தார். எலும்புகளைப் பெண்ணாக்கினார். சமணர்களை அனல்வாதம் புனல்வாதம் முதலியவாதங்களினாலே வென்றார். அப்பொழுதுதான் தீயிலிட்ட ஏடு வேகாதிருந்து சைவசமயத்திற்கு உயிர் தந்தது; ஆற்றிலிட்ட ஏடு எதிரேறிச் சென்றது. கடைசியில் ஆச்சாள்புரத்தில் நம்பாண்டார் நம்பிகள் புதல்வியாரைத் திருமணங்கொண்டருளுங்காலத்து திருமணங் தெரிசிக்கவந்த அனைவரையும் சோதியுட் புகுவித்துத் தாமும் காதலியைக் கைப்பற்றிக் கொண்டு சோதியுட் புகுந்தார்.

உ

சிவமயம்



# திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

**பண் – காந்தாரம்**

திருச்சிற்றம்பலம்

ஒளிரிளம்பிறை சென்னிமே
லுடையர்கோவண வாடையர்
குளிரிளம்மழை தவழ்பொழிற்
கோலநீர்மல்கு காவிரி
நளிரிளம்புனல் வார்துறை
நங்கைகங்கையை நண்ணினார்
மிளிரிளம்பொறி யரவினார்
மேயதுவிள நகரதே. ௧

அக்கரவ்வணி கலனென
வதனொடார்த்ததொ ராமைபூண்
டுக்கவர்சுடு நீறணிந்
தொளிமல்குபுனற் காவிரிப்
புக்கவர்துயர் கெடுகெனப்
பூசுவெண்பொடி மேவிய
மிக்கவர்வழி பாடுசெய்
விளநகரவர் மேயதே. ௨

௯

வாளிசேரடங் கார்மதி
றொலையநூறிய வம்பின்வேய்த்
தோளிபாக மமர்ந்தவ
ருயர்ந்ததொல்கட னஞ்சுடன்
காளமல்கிய கண்டத்தர்
கதிர்விரிசுடர் முடியினர்
மீளியேறுகந் தேறினார்
மேயதுவிள நகரதே. ௩

கால்விளங்கெரி கழலினார்
கையிலங்கிய வேலினார்
நூல்விளங்கிய மார்பினார்
நோயிலார்பிறப் பும்மிலார்
மால்விளங்கொளி மல்கிய
மாசிலாமணி மிடறினார்
மேல்விளங்குவெண் பிறையினார்
மேயதுவிள நகரதே. ௪

பன்னினார்மறை பாடினார்
பாயசீர்ப்பழங் காவிரித்
துன்னுதண்டுறை முன்னினார்
தூநெறிபெறு வாரெனச்
சென்னிதிங்களைப் பொங்கராக்
கங்கையோடுடன் சேர்த்தினார்
மின்னுபொன்புரி நூலினார்
மேயதுவிள நகரதே. ௫

தேவரும்மம ரர்களுந்
திசைகண்மேலுள தெய்வமும்
யாவரும்மறி யாததோ
ரமைதியாற்றழ லுருவினர்
மூவரும்மிவ ரென்னவு
முதல்வரும்மிவ ரென்னவும்
மேவரும்பொரு ளாயினர்
மேயதுவிள நகரதே. ௬

௰

சொற்றரும்மறை பாடினர்
சுடர்விடுஞ்சடை முடியினர்
கற்றருவ்வடங் கையினர்
காவிரித்துறை காட்டினர்
மற்றருந்திர டோளினர்
மாசில்வெண்பொடிப் பூசினர்
விற்றரும்மணி மிடறினர்
மேயதுவிள நகரதே. ௭

படர்தருஞ்சடை முடியினர்
    பைங்கழல்லடி பரவுவார்
அடர்தரும்பிணி கெடுகென
    வருளுவாரர வரையினர்
விடர்தரும்மணி மிடறினர்
    மின்னுபொன்புரி நாலினர்
மிடறரும்படை மழுவினர்
    மேயதுவிள நகரதே. ௮

கையிலங்கிய வேலினர்
    தோலினர்கரி காலினர்
பையிலங்கர வல்குலாள்
    பாகமாகிய பரமனர்
மையிலங்கொளி மல்கிய
    மாசிலாமணி மிடறினர்
மெய்யிலங்குவெண் ணீற்றினர்
    மேயதுவிள நகரதே. ௯

உள்ளதன்றனைக் காண்பன்கீ
ழென்றமாமணி வண்ணனும்
உள்ளதன்றனைக் காண்பன்மே
லென்றமாமல ரண்ணலும்
உள்ளதன்றனைக் கண்டிலா
ரொளியார்தருஞ்சடை முடியின்மேல்
உள்ளதன்றனைக் கண்டிலா
வொளியார்விளநகர் மேயதே. ௧௦

மென்சிறைவண் டியாழ்முரல்
விளநகர்த்துறை மேவிய
நன்பிறைநுத லண்ணலைச்
சண்பைஞானசம் பந்தன்சீர்
இன்புறுந்தமி ழாற்சொன்ன
வேத்துவார்வினை நீங்கிப்போய்த்
துன்புறுந்துய ரம்மிலாத்
தூநெறிபெறு வார்களே. ௧௧



ஞானசம்பந்தம் பிரஸ், தருமபுரம். C. 500.

## துறைகாட்டும்வள்ளலார் துதி

உருவினிற் சிறந்த தோழிநா யகியை
உடையநற் கருணையின் வாழ்வே
மருவள ரிதழி அணிதுறை காட்டு
வள்ளலே மனமுவந் தருள்வாய்
அருமறை யவனுக் கொருவழி காட்டும்
அமலனே ஆரழற் பிழம்பே
திருவிள நகர்வாழ் தீஞ்சுவைக் கரும்பே
செல்வமே கருணைவா ரிதியே.

## சம்பந்தசுவாமிகள் துதி.

என்றும் அடியவர் உள்ளத் திருப்பன;
இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன;
நல்லசங்கத்(து)
ஒன்றும் புலவர்கள் யாப்புக் குரியன
ஒண்கலியைப்
பொன்றும் கவுணியன் சைவ சிகாமணி
பொன்னடியே.